விருதுநகர் மாவட்டம் அருப்புக்கோட்டை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் சட்டமன்ற உறுப்பினர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், ஆத்திப்பட்டி, கஞ்சநாயக்கன்பட்டி ஆகிய பகுதிகளில் வாக்களித்து வெற்றி பெற வைத்த வாக்காளப் பெருமக்களுக்கு நேரில் சென்று நன்றி தெரிவித்தார். உடன் தலைமைச் செயற்குழு உறுப்பினர் சுப்புராஜ், ஒன்றிய செயலாளர்கள் பாலகணேஷன், பொன்ராஜ், இளைஞர் அணிச் செயலாளர்கள் அழகு ராமானுஜம், தங்கமணி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

'பெட்ரோல், டீசல் விலை உயர்வால் யாருக்கெல்லாம் பலன்?' மோடிக்கு கார்கே கேள்வி!

புதுடெல்லி, மே.24-

"தற்போதைய பெட்ரோல், டீசல் விலை உயர்வால் யாருக்கெல்லாம் பலன் கிட்டுகிறது என்று பிரதமர் நரேந்திர மோடி விளக்கம் அளிக்க வேண்டும்" என்று காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்ட சமூக வலைதளப் பதிவில், "ஒரு லிட்டர் பெட்ரோல் விலை ரூ.100ஐ கடந்துள்ளது. மக்களின் பணம் தவணை முறையில் கொள்ளை அடிக்கப்படுகிறது. ஒரு காலத்தில் சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய் விலை மிகவும் குறைவாக இருந்தது. அந்தக் காலத்தில் இந்தியாவில் பெட்ரோல், டீசல் விலை குறைக்கப்படவில்லை. அப்போது மக்களின் பணம் பகிரங்கமாக கொள்ளை அடிக்கப்பட்டது.

அண்மையில் சட்டப்பேரவைத் தேர்தல்கள் நடைபெற்றன. இந்த தேர்தல்கள் முடிந்த உடனேயே பெட்ரோல், டீசல் விலையை மத்திய அரசு உயர்த்தியது. அண்மை காலத்தில் 3 முறை விலை உயர்த்தப்பட்டு உள்ளது.

இத்தாலி, ஆஸ்திரேலியா, ஜெர்மனி உள்ளிட்ட நாடுகள் கலால் வரியை குறைத்து, பெட்ரோல், டீசல் விலையை கட்டுப்படுத்தி உள்ளன. பிரிட்டன், அயர்லாந்து நாடுகளில் எரிசக்திக்காக சிறப்பு மானிய உதவிகள் வழங்கப்படுகின்றன. இந்தியாவில் தற்போதைய பெட்ரோல், டீசல் விலை உயர்வால் யார், யாரெல்லாம் பலன் அடைகிறார்கள் என்பது குறித்து பிரதமர் நரேந்திர மோடி விளக்கம் அளிக்க வேண்டும்" என்று மல்லிகார்ஜுன கார்கே வலியுறுத்தியுள்ளார்.

கச்சா எண்ணெய் விலை உயர்வு மற்றும் நீண்ட தொலைவு உள்ளிட்ட காரணங்களால் இந்திய எண்ணெய் நிறுவனங்களுக்கு தினசரி ரூ.1,000 கோடி இழப்பு ஏற்பட்டது. இதை ஈடுகட்ட கடந்த 15ம் தேதி பெட்ரோல், டீசல் விலை லிட்டருக்கு தலா ரூ.3 உயர்த்தப்பட்டது. கடந்த மே 19ம் தேதி ஒரு லிட்டர் பெட்ரோல், டீசல் தலா 90 பைசா அதிகரிக்கப்பட்டது.

இந்த நிலையில், கடந்த 10 நாட்களில் 3வது முறையாக பெட்ரோல், டீசல் விலை இன்று உயர்த்தப்பட்டது. இதன்படி சென்னையில் ஒரு லிட்டர் பெட்ரோல் 82 பைசா உயர்ந்து ரூ.105.31க்கும், ஒரு லிட்டர் டீசல் 87 பைசா உயர்ந்து ரூ.96.98க்கும் விற்பனை செய்யப்படுகிறது.

'வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் கச்சா எண்ணெய் இந்தியாவின் 23 நிலையங்களில் சுத்திகரிப்பு செய்யப்படுகிறது. சுத்திகரிக்கப்பட்ட பெட்ரோல், டீசல் மீது மத்திய அரசு கலால் வரியை விதிக்கிறது. மாநில அரசுகள் வாட் வரியை விதிக்கின்றன. எண்ணெய் நிறுவனங்கள் சார்பில் பெட்ரோல் நிலைய உரிமையாளர்களுக்கு 10 சதவீதம் கமிஷன் வழங்கப்படுகிறது.

இவை அனைத்தையும் கணக்கிட்டு பெட்ரோல், டீசல் விலை நிர்ணயம் செய்யப்படுகிறது. எண்ணெய் நிறுவனங்களின் இழப்பை ஈடுகட்ட கடந்த 10 நாட்களில் 3 முறை விலை உயர்த்தப்பட்டு உள்ளது. இதன்மூலம் ஒரு லிட்டர் பெட்ரோல், டீசல் ரூ.5 வரை விலை உயர்ந்திருக்கிறது. இதேபோல ஒரு கிலோ சிஎன்ஜி விலை ரூ.4 வரை விலை அதிகரித்திருக்கிறது. விலை உயர்த்தப்பட்டாலும் எண்ணெய் நிறுவனங்கள் தொடர்ந்து இழப்பை சந்தித்து வருகின்றன' என்று எண்ணெய் நிறுவன வட்டாரங்கள் தெரிவித்தன.

தூத்துக்குடி வடக்கு மாவட்டக் கழக நிர்வாகிகள் கூட்டம் கழகத் துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி., தலைமையில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் மாவட்டச் செயலாளர் திருமதி கீதாஜீவன் மற்றும் நிர்வாகிகள் பங்கேற்றனர்.

கனிமொழி கருணாநிதி எம்.பி. தலைமையில்

தூத்துக்குடி வடக்கு மாவட்டக் கழகக் கூட்டம்!

மாவட்டச் செயலாளர் திருமதி கீதாஜீவன் சிறப்புரை!

தூத்துக்குடி, மே 24-

தூத்துக்குடி வடக்கு மாவட்ட திமுக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் தூத்துக்குடி கலைஞர் அரங்கில் நடைபெற்றது. இந்த ஆலோசனைக் கூட்டத்தில் கழக துணைப் பொதுச்செயலாளரும், தூத்துக்குடி பாராளுமன்ற உறுப்பினருமான கனிமொழி கருணாநிதி அவர்களும், மாவட்டக் கழக செயலாளரும், முன்னாள் அமைச்சருமான திருமதி. கீதாஜீவன் அவர்களும் கலந்து கொண்டு கழக வளர்ச்சிப் பணிகள் குறித்தும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாளை சிறப்பாக கொண்டாடுவது குறித்தும் ஆலோசனைகள் வழங்கி உரையாற்றினார்கள்.

மாவட்ட அவைத் தலைவர் செல்வராஜ் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் சட்ட மன்ற உறுப்பினர்கள் மார்க்கண்டேயன், கருணாநிதி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஜெகன் பெரியசாமி, மாவட்டத் துணைச் செயலாளர்கள் ராஜ்மோகன் செல்வின், ஆறுமுகம், ஏஞ்சலா, மாவட்டப் பொருளாளர் சுசி ரவீந்திரன், மாநகர செயலாளர் ஆனந்தசேகரன், கயத்தாறு முன்னாள் யூனியன் சேர்மன் SVSPமாணிக்க ராஜா, ஒன்றியக் கழக செயலாளர்கள் சின்னப்பாண்டியன், சுப்ரமணியன், முருகேசன், கருப்பசாமி, ஆர். ராதாகிருஷ்ணன், ஜெயக் கண்ணன், செல்வராஜ், மும்மூர்த்தி, என். ராதாகிருஷ்ணன், சின்ன மாரி முத்து, காசி விஸ்வநாதன், நவநீத கண்ணன், ராம சுப்பு, அன்பு ராஜன், இம் மானுவேல், பகுதி கழகச் செயலாளர்கள் ஜெயக்குமார், நிர்மல்ராஜ், சுரேஷ் குமார், ரவீந்திரன், ராம கிருஷ்ணன், மேகநாதன், பேரூர் செயலாளர்கள் கிருஷ்ணகுமார், சுரேஷ் கண்ணன், பாலகுமார், வேலுச்சாமி, பாரதி கணேசன் மற்றும் மாவட்டப் பிரதிநிதிகள், மாவட்ட அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் உள்ளிட்ட திரளானோர் கலந்து கொண்டனர்.

மேலும் அக்கூட்டத்தில் கடந்த சட்டமன்றத் தேர்தலில் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மேற்கொண்ட பிரச்சாரத்திற்கு நன்றி தெரிவித்தல், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103 வது பிறந்த நாளை சிறப்பாக கொண்டாடுதல், விளாத்திகுளம் கோவில்பட்டி ஆகிய சட்டமன்ற தொகுதிகளில் கழக வெற்றிக்கு உறுதுணையாக இருந்த கழக நிர்வாகிகள் மற்றும் மதச் சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகளுக்கு நன்றி தெரிவித்தல், 30 ஆண்டுகளுக்கும் மேலாக ஒருங்கிணைந்த தூத்துக்குடி மாவட்ட திமுக மாவட்டச் செயலாளராக கோலோச்சிய என். பெரியசாமி அவர்களின் 9வது நினைவு தினத்தை அனுசரித்தல் ஆகிய நான்கு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

தாம்பரம் மாநகர தி.மு.க. சார்பில்

முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்தநாள் விழாவை சிறப்பாகக் கொண்டாடுவோம்!

செயற்குழுக் கூட்டத்தில் முடிவு! எஸ்.ஆர்.ராஜா ஆலோசனை!

தாம்பரம், மே 24

தாம்பரம் மாநகர தி.மு.க. செயற்குழு கூட்டம் நடைபெற்றது இதில் துணை மேயர், மாநகர அவைத் தலைவர் கோ. காமராஜ் அவர்கள் தலைமையில் நடைபெற்ற செயற்குழு கூட்டத்தில் தாம்பரம் மாநகர செயலாளர் எஸ்.ஆர்.ராஜா பேசுகையில் வருகின்ற ஜூன் 3 தேதி அன்று தலைவர் கலைஞரின் பிறந்தநாளை முன்னிட்டு மாநகரத்தில் உள்ள அனைத்து வட்டங்களிலும் ஒளி ஒலி அமைத்தும் கழக கொடி ஏற்றி பொது மக்களுக்கு இனிப்பு மற்றும் நலத் திட்ட உதவிகளை வழங்கிடவும் மிகுந்த ஏழிச்சியுடன் கொண்டாடிடவும் வருகின்ற காலங்களில் கழக வளர்ச்சியில் கழக நிர்வாகிகள் சிறப்பாக செயல்பட ஆலோசனை வழங்கினார்.

இதில் மாநகர நிர்வாகிகளும் மேயர்.க.வசந்த குமாரி, இரா.நரேஷ் கண்ணா, வ.விஜயரங்கன், மண்டல குழு தலைவர்கள் எஸ்.இந்திரன், டி.காமராஜ், வே.கருணாநிதி, பகுதி செயலாளர்கள் எஸ். சேகர்,இரா.சுரேஷ்,மாநில மருத்துவ அணி துணை செயலாளர் டாக்டர் ஆர். எஸ்.கிருத்திகாதேவி, க. தேவேந்திரன், கி.வே;ykணி, எஸ்.ஜி.கருணாகர பாண்டியன்,ரமணிஆதிமூலம்,எ.மனோகரன்,இரா. விஜயகுமார்,எஸ்.கார்த்திக்,வீ.கார்த்திக்,டைகர் சிவா,தி.ச.நடராஜன்,மலர் கருணா,கோ.தேனுபுரி,த. பூங்கோதை,இரா.சிவகுமார்,கல்யாணி,ஜெ.சத்தியசீலன்,டி.கே.கோட்டி.,மு. தசரதன், டி.ஆர்.கோபி,சி. சுரேஷ்,பி.ஜோதிகுமார், ஆர்.தாமோதரன், எல். பெரியநாயகம்,சசிகலா கார்த்திக்ஆகியோருடன் பகுதி கழக நிர்வாகிகள், வட்ட செயலாளர்கள், மாநகர அணிகளின் துணை அமைப்பாளர்கள், மற்றும் சிறப்பு அழைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

தாம்பரம் மாநகர தி.மு.க. செயற்குழு கூட்டம் துணை மேயர், மாநகர அவைத் தலைவர் கோ.காமராஜ் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் தாம்பரம் மாநகர செயலாளர் எஸ். ஆர்.ராஜா பேசுகையில் வருகின்ற ஜூன் 3 தேதி அன்று தலைவர் கலைஞரின் பிறந்தநாளை சிறப்பாகக் கொண்டாடவும், கழக வளர்ச்சியில் கழக நிர்வாகிகள் சிறப்பாக செயல்படவும் ஆலோசனை வழங்கினார். இதில் மேயர்.க.வசந்தகுமாரி, இரா.நரேஷ்கண்ணா, வ. விஜயரங்கன், மண்டல குழு தலைவர்கள் எஸ்.இந்திரன், டி.காமராஜ், வே.கருணாநிதி, பகுதி செயலாளர்கள் எஸ்.சேகர்,இரா.சுரேஷ், டாக்டர் ஆர்.எஸ்.கிருத்திகாதேவி, க.தேவேந்திரன், கி.வேல்மணி,எஸ்.ஜி.கருணாகரபாண்டியன்,ரமணி ஆதிமூலம் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

வானிலை முன்னறிவிப்பு:

தமிழகத்தில் 19 மாவட்டங்களில் கனமழை வாய்ப்பு!

சென்னை, மே.24-

தமிழகத்தில் இன்று (மே 24) கோவை, சேலம், வேலூர், திருச்சி, மதுரை உள்ளிட்ட 19 மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் இன்று கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக் குறிப்பு வருமாறு:-

தென்கிழக்கு மற்றும் அதனை ஒட்டிய மத்திய வங்கக்கடல் பகுதிகளில் சுமார் 3.1 கிமீ முதல் 5.8 கிமீ உயரம் வரை ஒரு வளிமண்டல சுழற்சி நிலவுகிறது. இதன் காரணமாக தமிழகத்தில் இன்று (மே 24), நாளை மறுதினமும் ஒருசில இடங்களிலும், 26 முதல் 29ம் தேதி வரை ஓரிரு இடங்களிலும் இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

தமிழகத்தில் நாளையும், நாளை மறுதினமும் நீலகிரி, கோவை, ஈரோடு, திருப்பூர், சேலம், தருமபுரி, கிருஷ்ணகிரி, திருப்பத்தூர், வேலூர், ராணிப்பேட்டை, திருவண்ணாமலை, கள்ளக்குறிச்சி, பெரம்பலூர், திருச்சி, நாமக்கல், கரூர், திண்டுக்கல், தேனி மற்றும் மதுரை மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் இடி, மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் (மணிக்கு 40 முதல் 50 கி.மீ வேகத்தில்) கூடிய கனமழை பெய்யக்கூடும்.

26ம் தேதி கோவை மற்றும் திருப்பூர் மாவட்டங்களின் மலைப்பகுதிகள், நீலகிரி, தேனி, திண்டுக்கல், விருதுநகர், தென்காசி திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் இடி, மின்னல், பலத்த காற்றுடன் கூடிய கனமழை பெய்யக்கூடும். தமிழகம், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளில் நாளை முதல் 27ம் தேதி வரை அதிகபட்ச வெப்ப நிலை வழக்கத்தை விட குறைவாக இருக்கக்கூடும்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் நாளை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். மாலை அல்லது இரவு நேரங்களில் இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலை 104 டிகிரி, குறைந்தபட்ச வெப்பநிலை 86 டிகிரி ஃபாரன்ஹீட் அளவை ஒட்டி இருக்கக்கூடும்.

தமிழகத்தில் நேற்று காலை 8.30 மணியுடன் நிறைவடைந்த 24 மணி நேரத்தில் பதிவான மழை அளவுகளின்படி அதிகபட்சமாக திருநெல்வேலி மாவட்டம் நாலுமுக்கு, ஊத்து, திருவண்ணாமலை மாவட்டம் போளூரில் தலா 4 செமீ, திருநெல்வேலி மாவட்டம் காக்காச்சி, கள்ளக்குறிச்சி மாவட்டம் விருகாவூர், திருப்பத்தூரில் தலா 3 செமீ மழை பதிவாகியுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

விழுப்புரம் மத்திய மாவட்ட கழக பொறுப்பாளரும், விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினருமான டாக்டர் இரா.இலட்சுமணன் விழுப்புரம் மத்திய மாவட்டம், விழுப்புரம் சட்டமன்றத் தொகுதி, விழுப்புரம் கிழக்கு நகரம், கழக நிர்வாகிகளுக்கு நன்றி தெரிவிக்கும் கூட்டத்தில் கலந்து கொண்டு நன்றி தெரிவித்து, சிறப்புரையாற்றினார். உடன் விழுப்புரம் கிழக்கு நகர கழக பொறுப்பாளர் எஸ்.வெற்றிவேலா, மற்றும் நகர கழக நிர்வாகிகள், மாவட்ட, நகர சார்பு அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், வார்டு கழக நிர்வாகிகள், BLA 2, BDA, BLC மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.